அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI





Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com


அ.எண்: 32 /2017
தேதி: 09.03.2017

# மீனவர்கள் மீது தனிகவனம் செலுத்தவேண்டும்

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் வலியுறுத்தல்

மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் இனிமேல் துப்பாக்கிசூடு நடத்தாமல், மீனவர்கள் தாக்குதலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அளவிற்கு பேச்சுவார்த்தையுடன் கடலோர எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரப்படுத்தவேண்டும்.

மீனவர் பிரிட்சோ இலங்கை கடற்படையினரால் சுட்டு கொலை செய்யப்பட்டதற்கு மீண்டும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறேன். மீனவர்கள் பிரச்சனைகளை முழுமையாக ஆராய்ந்து பலமுறை தெரிவித்த கடிதத்திற்கு வலுசேர்க்கும் வகையில் 02.03.2017 அன்று நடந்த சிறப்பு பொதுக்குழு கூட்டத்தில் மீனவ சகோதர்களுக்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :-

தமிழக மீனவர்களை கொலை செய்து, கைது செய்து மீன்பிடி உபகரணங்களை சேதப்படுத்தி, எல்லையற்ற துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். மேற்கண்ட கொடுமைகளிலிருந்து தமிழக மீனவர்களை காப்பதற்கு **கச்சத்தீவினை மீட்பதுதான்** ஒரே தீர்வாகும். எனவே மத்திய மாநில அரசுகள் உடனே தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இருநாட்டு மீனவர்களுக்கிடையே **“கடல் எல்லை தாண்டல்”** பிரச்சனையை தீர்க்கும் வகையில் இரு நாட்டு மீனவ பிரதிநிதிகள் கொண்ட குழு அமைத்தால், இரு நாட்டு மீனவ படகுகளிலும் **GPS கருவி** பொருத்தி இரு நாட்டு கடலோர காவல் படை உதவியுடன் கண்காணித்து பிரச்சனைகள் உருவாவதற்கு முன் தடுத்திட இருநாட்டு அரசுகளையும் தயார்படுத்திட வேண்டும்.

தமிழக அரசு மீனவர்கள் நலன்கருதி மேலே குறிப்பிட்டுள்ள எங்கள் கோரிக்கைகளை பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கை அரசு மீனவர் பிரிட்சோ உயிரிழப்பிற்கு மன்னிப்பு கேட்டாலும் அவரது உயிரிழப்பு ஈடுசெய்யமுடியாதது. மெத்தனபோக்கோடு செயல்பட்ட அந்த அதிகாரிகளை தண்டிக்கவேண்டும். அப்படி தண்டித்தால்தான் இனி வரும் காலங்களில் அதிகாரிகளும் பொறுப்போடு செயல்படுவார்கள்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,



**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்